பெப்ரவரி - 2011

திருவள்ளுவர் ஆண்டு 2042

# செந்தமிழ்

தொகுதி : 55
பகுதி : 4

விலை ரூ. 10/-

## திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு




**54ஆம் பட்டமளிப்பு விழாவில்**

நீதியரசர் ஏ.ஆர். லட்சுமணன் அவர்கள் பல்கலைக் கழக முதன்மை பெற்ற மாணவி ஷோபியாவிற்கு வழங்கினார். உடன் செந்தமிழ் கல்லூரிச் செயலாளர் திருமிகு. இரா. குருசாமி அவர்கள், மதுரைத் தமிழ்ச் சங்கச் செயலாளர் திருமிகு. இரா. அழகுமலை அவர்கள் மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர் திருமிகு. க. முத்தையா பசும்பொன், ஒருங்கிணைப்பாளர், மற்றும் முதல்வர் (பொ)

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 55 திங்கள் இதழ்

பகுதி : 4 திருவள்ளுவர் ஆண்டு 2042

பெப்ரவரி 2011




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


**முகவை மன்னர் நா. குமரன் சேதுபதி**
தலைவர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---

**ஆசிரியர்**
**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை.

# பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| திருக்குறளில் மோனை நயம் | *ஆறுவிரல் ஐம்பொறி* | 4 |
| சபரிமலை மகரப் பேரொளிச் சுடர் | *ஆதி. பாலசுந்தரன்* | 7 |
| நூலகங்கள் அறிவின் ஊற்றுகள் | *புலவர் சி. பாண்டுரங்கன்* | 11 |
| அருள்மிகு இம்மையிலும் நன்மைதருவார் திருக்கோயிலும் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டும் | *முனைவர் பி. ஆறுமுகம்* | 13 |
| குறுந்தொகை உணர்த்தும் ஓர் ஐயப்பாடு | *முனைவர் இந்திராகாந்தி* | 18 |
| பரிதிமாற் கலைஞர் | *கிரிஜா ராகவன்* | 21 |
| ஔவை சு.துரைசாமிப் பிள்ளையின் அருட்பா உரைமரபுகள் | *தி. கவிதா* | 24 |
| பதிற்றுப்பத்து | *முனைவர் சி. கௌரி* | 29 |
| தமிழ் அலங்காரச் சதகம் | *கவிஞர். மழைமகன்* | 35 |
| தமிழா, ஒரு வழக்கு ! | *கவிவேந்தர் கா. வேழவேந்தன்* | 36 |
| செம்மொழித் தமிழ்ப் பூங்கா | *ஆதி. பாலசுந்தரன்* | 38 |

# இதழ் மணம்

அன்புடையீர்,

செந்தமிழ் வாசகர்களுக்கு வணக்கம்.

2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இதழ் பதினோரு தலைப்புகளோடு தங்கள் கைகளில் தவழ்கிறது. முதல் எழுத்து ஒன்றி வரும் மோனை திருக்குறளில் எவ்வாறு வருகிறது எனக்கூறுவதோடு எழுவகை மோனைகளும் எவ்வாறு இடம் பெறுகின்றன என ஆறுவிரல் ஐம்பொறி அவர்கள் எடுத்தியம்பியுள்ளார்.

ஆதி பாலசுந்தரம் அவர்கள் "சபரிமலை மகர பேரொளிச்சுடரின்" மர்மத்தைப் பக்தி நயம் பிசகாமல் வரலாற்றுச் சான்றுகளோடு தந்திருப்பது மகிழ்வூட்டுகிறது.

கப்பலுக்குத் திசை காட்டும் கருவி போல மனிதனுக்குத் திசை காட்டும் கருவியாக நூல்கள் அமைந்திருப்பதை "நூலகங்கள் அறிவின் ஊற்றுக்கள்" என்ற தலைப்பில் தந்து சிறப்பித்திருக்கிறார் புலவர் சி. பாண்டுரங்கன் அவர்கள்.

மதுரை மாநகருக்கு மற்றொரு பெருமை அருள்மிகு இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோவில் ஆகும். இத்தலப் பெருமையையும், இத்திருத்தலத்தில் காணப்படும் கல்வெட்டையும் காட்டி பன்னிரெண்டாம் நூற்றாண்டின் கால வரலாற்றோடு வாசகர்களையும் கட்டிப்போட முனையும் முனைவர் பி. ஆறுமுகம் பெருமைக்குரியவர்.

முனைவர் இந்திராகாந்தி அவர்களுடைய "குறுந்தொகை உணர்த்தும் ஓர் ஐயப்பாடு" தலைவனால் தலைவி ஏமாற்றப்பட்டால் அவளின் நிலை என்ன என்பதை "யாரும் இல்லை தானே கள்வன்" என்ற குறுந்தொகை பாடலின் மூலம் விளக்கியிருக்கிறார்.

திருமதி கிரிஜா இராகவன் அவர்கள் தான் பரிதிமாற் கலைஞரின் பெயர்த்தி என்பதைப் பரிதிமாற் கலைஞர் என்ற கட்டுரையைத் தந்து தான் வழிவந்த மரபிற்குப் பெருமை சேர்த்திருப்பது பாராட்டுக்குரியது.

"அவ்வை சு. துரைசாமிப் பிள்ளையின் உரை மரபுகளை" தி. கவிதா அவர்களும், பதிற்றுப்பத்தின் "பா"த்திறம் பற்றி முனைவர் கி. கௌரி அவர்களும் தந்திருக்கும் சிறப்புகளோடு கவிஞர் மழைமகன் அவர்களின் சந்தக் கவிதையோடு, கவிவேந்தர் கா.வேழவேந்தன் அவர்களின் தமிழ் உணர்வு கவிதையும் இம்மாத இதழ் மூலம் பரவசப்படுத்தும் என நம்புகிறோம்.

முனைவர் க. சின்னப்பா

இனி நீங்களும் இதழும்....

# திருக்குறளில் மோனை நயம்

*ஆறுவிரல் ஐம்பொறி*
வீரசோழபுரம்

செந்தமிழ் மொழியில் செய்யுளில் அடிதோறும் உள்ள சீர்களில் முதல் எழுத்து ஒன்றி வருதல் மோனையாகும். இம்மோனை ஏழு வகைப்படும். அவை இணை மோனை, பொழிப்பு மோனை, ஒரூஉ மோனை, கூழை மோனை, மேற்கதுவாய் மோனை, கீழ்க்கதுவாய் மோனை, முற்று மோனை என்பனவாம்.

*இருசீர் மிசையிணை யாகும் பொழிப்பிடையிட் டொருவாம்*
*இருசீ ரிடையிட்ட திறிலி கூழை முதலிறுவாய்*
*வருசீ ரயலில மேல்கீழ் வகுத்தமை கீழ்கதுவாய்*
*வருசீர் முழுவதும் ஒன்றின்முற் றாமென்ப.*

யாப்பருங்கலம் – 19.

இந்நூற்பாவின் வழி மோனை வகைகளும் அவற்றின் விளக்கங்களும் தெளிவாகின்றன.

ஒரு திருக்குறளில் உள்ள ஏழு சீர்களுள் ஆறு சீர்களில் முதல் எழுத்து ஒன்றியுள்ள குறட்பா ஒன்று மட்டுமே உள்ளது. அதனை இங்கே காண்போம்.

*துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்*
*துப்பாய தூஉம் மழை.* – குறள் 12.

இக்குறட்பாவில் ‘து’ ஐந்து சீர்களில் முதல் எழுத்தாகவும் ‘தூ’ ஒரு சீரில் முதல் எழுத்தாகவும் அமைந்துள்ளதைக் காணலாம். இக்குறட்பாவில் முதலடியில் நான்கு சீர்களிலும் மோனை (முதல் எழுத்து ஒன்றி) வரத் தொடுத்திருப்பது முற்று மோனையாகும்.

*சீர்தொறும் தொடுப்பது முற்றெனப் படுமே* –

யாப்பருங்கலம் – 19

ஒரு திருக்குறளில் உள்ள ஏழு சீர்களுள் ஐந்து சீர்களில் முதல் எழுத்து ஒன்றியுள்ள குறட்பாக்கள் இரண்டு மட்டுமே உள்ளன. அவற்றை இங்கே காணலாம்.

1. *பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
   *பற்றுக பற்று விடற்கு.* குறள் - 350

இக்குறட்பாவில் நான்காம் சீரும் இறுதிச் சீரும் தவிர ஏனைய (ஐந்து) சீர்களில் 'ப' என்னும் எழுத்து முதல் எழுத்தாக அமைந்துள்ளதைக் காணலாம். இக்குறட்பாவில் முதலடியில் முதல் மூன்று சீர்களிலும் மோனை (முதல் எழுத்து ஒன்றி) வரத்தொடுத்திருப்பது கூழை மோனையாகும்.

*மூவொரு சீரும் முதல்வரத் தொடுப்பது*
*கூழை யென்மனார் குறியுணர்ந் தோரே*

- யாப்பருங்கலம் - 19

2. *இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்*
   *இன்மையே இன்னா தது.* - குறள் 1041

இக்குறட்பாவில் மூன்றாம் சீரும் இறுதிச் சீரும் தவிர ஏனைய (ஐந்து) சீர்களில் 'இ' என்னும் எழுத்து முதலெழுத்தாக அமைந்துள்ளதைக் காணலாம். இக்குறட்பாவில் முதலடியில் ஈற்றயல் சீர் தவிர ஏனைய (மூன்று) சீர்களில் மோனை (முதல் எழுத்து ஒன்றி) வரத் தொடுத்திருப்பது கீழ்க்கதுவாய் மோனையாகும்.

*ஈற்றயற் சீர்ரொழித் தெல்லாம் தொடுப்பது*
*கீழ்க்கது வாயின் கிழமைய தாகும்* - யாப்பருங்கலம் 19

சொல்லப்பட்ட மூன்று குறட்பாக்களிலும் இரண்டாம் அடியில் முதல் இரண்டு சீர்களில் மோனை (முதல் எழுத்து ஒன்றி) வரத் தொடுத்திருப்பது இணை மோனையாகும். இது போன்ற இணை மோனைகள், பல குறட்பாக்களில் அமைந்துள்ளன.

*இருசீர் மிசைவரத் தொடுப்பதை யிணையே*

- யாப்பருங்கலம்

*இருவேரு உலகத்து இயற்கை திருவேறு*
*தெள்ளியர் ஆதலும் வேறு.* - குறள் - 374

இக்குறட்பாவில் முதல் அடியில் முதற் சீரிலும், மூன்றாம் சீரிலும் முதல் எழுத்து (இ) ஒன்றிவரத் தொடுத்திருப்பது பொழிப்பு மோனையாகும். இது போன்ற பொழிப்பு மோனைகள், பல குறட்பாக்களில் அமைந்துள்ளன.

*முதலொடு மூன்றாஞ் சீர்தொடை பொழிப்பே*

– யாப்பருங்கலம்

*ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு*
*எழுமையும் ஏமாப் புடைத்து* - குறள் 398

இக்குறட்பாவில் முதல் அடியில் முதற்சீரிலும் நான்காம் சீரிலும் முதல் எழுத்து (ஒ) ஒன்றிவரத் தொடுத்திருப்பது ஒரூஉ மோனையாகும். இது போன்ற ஒரூஉ மோனைகள், பல குறட்பாக்களில் அமைந்துள்ளன.

*சீரிரண் டிடைவிடத் தொடுப்ப தொரூஉத் தொடை.*

- யாப்பருங்கலம்

*விண்நின்று பொய்ப்பின் விரிநீர் வியன்உலகத்*
*துள்நின்று உடற்றும் பசி* - குறள். 13

இக்குறட்பாவில் முதல் அடியில் முதற் சீரிலும் மூன்றாம் சீரிலும், நான்காம் சீரிலும் முதல் எழுத்து (வி) ஒன்றி வரத் தொடுத்திருப்பது மேற்கதுவாய் மோனையாகும். இது போன்ற மேற்கதுவாய் மோனைகள், பல குறட்பாக்களில் அமைந்துள்ளன.

*முதலயற் சீரொழித் தன்னல மூன்றின்*
*மிசைவரத் தொடுப்பது மேற்கது வாயே*

- யாப்பருங்கலம்

திருக்குறளில் மட்டுமல்ல தமிழ் மொழிச் செய்யுட்கள் அனைத்திலும் மோனை நய நுட்பங்கள் நிறைந்துள்ளன. அதனால்தான் தமிழ் மொழி, உலக மொழி வல்லுநர்களால் போற்றிப் புகழப்படுகின்றது.

# சபரிமலை மகரப் பேரொளிச் சுடர்

*ஆதி. பாலசுந்தரன்*
நாகர்கோயில்

மேற்குத் தொடர்ச்சி மலைத் தொடரின் ஒரு பகுதி சபரிமலை. சபரிமலைப் பெருந்திருவிழாக்களுள் ஒன்று, அம்மலைத் தொடரில் அடர்ந்த கானகத்து உச்சியில், கார்த்திகைத் திங்களில், பொன்னம்பல மேட்டில் தோன்றும் மகரப் பேரொளிச் சுடர் வழிபாட்டு விழாவாகும். சில வினாடிகள் தோன்றி மறையும் இப்பேரொளிச் சுடரைப் பல்லாயிரவர் தொழுது இறைஞ்சிப் போற்றி வருகின்றனர்.

மேலே மலைத் தொடரில் 'பந்தளம்' என்னும் இடத்தில் பந்தள மன்னன் கட்டிய அரண்மனை ஒன்று உள்ளது. இப்பந்தள மன்னன் பிற்காலப் பாண்டிய மன்னருள் ஒருவனான இராசசேகரபாண்டியன் ஆவான். இதற்குச் சான்றாகப் பாண்டிய மன்னர் மரபுளோரின் வழிபடு கடவுளான மீனாட்சியம்மையின் உருவத் திருமேனி அவ்வரண்மனையில் நல்லிருப்புச் செய்யப்பட்டுள்ளது.

பந்தள அரண்மனையிலிருந்து திருவாபரணங்களைக் கொணர்ந்து அய்யப்பனுக்குச் சார்த்திய பிறகு ஏற்றுகின்ற சோதியைத் தான் 'மகர சோதி' எனக் குறிப்பிடுகின்றனர். விண்ணில் 'சோதி தரிசனம்' என்பது மரபு வழி நம்பிக்கை என மிக மூத்த 'குருசாமி' சொல்லும் செய்தியும் உண்டு.

ஆன்மிக உணர்வு, உறுதியான நம்பிக்கை இவற்றின் அடிப்படையில் பல்லாயிரவர் போற்றி வணங்குகின்றனர். ஆண்டு தோறும் குறிப்பிட்ட நேரத்தில் தோன்றி மறையும் இப்பேரொளி அரிய விண்மீன்களுள் ஒன்று எனவும், அவ்விண் மீனைப் பற்றிய முழுமையான செய்தி யாதும் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் ஆன்மிக நம்பிக்கையுடையார் இயம்பி வருகின்றனர்.

இவ்விடத்து இக்கூற்றுக்கு இயைபுடைய சான்று ஒன்று கூறலாம்.

"Brown Mountain in western carolina in the US is famous for the mysterious lights seen on it at night. The lights reported for centuries, are falls of illumination that Blare up, last from a few seconds to a minute or so, and vanish. Sometimes they more in a group through the trees on the mountains. They are usually red or white but blue, green, yellow and orange lights are extraordinarily brights even when seen from a long distance. Occassionally, a light may swell to the size of the full moon. They've never been known to cause a fire. What causes the lights? Nobody known for sure, though many studies have been carried out and many theories have been advanced to explain their ocurrence"
- *(The Hindu, March 30, 2002)*

திருவண்ணாமலை திருத்தலத்தில் ஆண்டு தோறும் திருக்கார்த்திகை நன்னாளில், மலை உச்சியில் பேரொளிச் சுடர் ஏற்றப்படுகிறது.

இன்றைய கேரளம் பண்டைய சேரநாடு. இச்சேர நாட்டில் சங்க காலத்தில் மலை உச்சியில் பேரொளிச் சுடர் ஏற்றப்பட்டது. திருக்கார்த்திகைத் திருவிழா சேர நாடு முழுவதும் கொண்டாடப்பட்ட நாடு தழுவிய பெருந்திருவிழா.

பேரொளிச் சுடர் ஏற்றப்பட்ட செய்தியைப் பாலை பாடிய பெருங்கடுங்கோ என்னும் சேர மன்னராகிய புலவர் பெருமான் அகநானூற்றில் குறிப்பிடுகின்றார்.

திருக்கார்த்திகைத் திருவிழாக் கொண்டாடப்படும் போது, மலைமேல் பேரொளிச் சுடர் ஏற்றப்பட்டதாகச் சொல்லுகிறார். இப்பெருமகனார் சேர நாட்டை ஆண்ட மன்னருள் ஒருவர்.

இவ்விழாவைக் கொண்டாடும் சேர மன்னர் மரபைச் சார்ந்தவர். எனவே, தமது நாட்டில் கால்வழியாகக் கொண்டாடப்பட்டு வரும் இப்பெருவிழாவைச் சுட்டிச் சொல்லுகிறார்.

பொன்னம்பல மேடு என்னும் மலை உச்சிப் பகுதியில் இப்பேரொளி தெரிவதாகச் சொல்லுகிறார்கள். பொன்னம்பல மேடு, பெரியாறு புலிகள் காப்பகத்தின் ஒரு பகுதி. அடர்ந்த சோலைக் காட்டுப் பகுதி.

தமிழகக் கீழைக் கடற்கரையையொட்டியது பொன்னம்பலம் - தில்லைக் கோயில். வடக்கே மா அம்பலம் - மாம்பலம். சேர நாட்டில் (கேரளத்தில்) அம்பலப் புழை, அம்பலங்காடு, அம்பலங்கோடு, அங்கேயே பொன்னம்பல மேடு. இன்றைய கேரளத்தில் அமைந்துள்ள திருக்கோயில்கள் அனைத்தையும் 'அம்பலம்' என்னும் பொதுப் பெயராலேயே இப்போதும் கேரள மக்கள் குறிப்பிட்டுப் பேசுகிறார்கள். சங்க காலச் சொல் !. கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான் நம் நினைவில் வருகிறார்.

தொடக்க காலத்தில் சபரிமலை அய்யப்பனை வழிபடுவதற்கு அடர்ந்த கானகத்தின் வழியே மலையேறிச் செல்ல வேண்டியிருந்தது. அப்போது காட்டு விலங்குகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு வெடி வெடித்துக் கொண்டே சென்றார்கள். காலப் போக்கில் அவ்விலங்குகளின் ஊறு குறைந்து விட்டது. எனினும், பழைய வழக்கம் "வேட்டு வெடித்தல்" என்னும் வழிபாடாக மாறிவிட்டது.

அதுபோன்று, சேரநாட்டு மலை உச்சி மீது ஏற்றப்பட்டு வந்த கார்த்திகைத் திருநாள் பேரொளிச் சுடர் கால மாறுபாட்டில் இறைவன் அய்யப்பனின் 'மகர சோதி தரிசன' மாகத் தைத்திங்களில் இப்போது காட்சி தருகிறது.

"திருவண்ணாமலைத் திருக்கோயிலில் மூன்றாம் குலோத்துங்கச் சோழ மன்னன் காலத்துக் கல்வெட்டு உள்ளது. அதில், அவனுடைய 24ஆம் ஆட்சியாண்டில் 'அருந்ததி சமூகத்தினர்' தோலால் செய்த காலணி இறைவனுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அவர்களுக்குத் திருக்கோயிலுக்குள்

வழிபாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. (அ. கிருஷ்ணன் - கல்வெட்டில் வாழ்வியல் - ப. 129)

இன்றும் திருவண்ணாமலையில் திருக்கார்த்திகைத் தீபத்தன்று, முதன் முதல் கார்த்திகைத் தீபம் ஏற்றும் உரிமை பருவத ராஜகுல மக்களுக்கே உண்டு என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவை போன்று, திருவனந்தபுரம் பத்மநாப சுவாமி திருக்கோயிலின் மூலக் கோயிலான திருவம்பாடிக் கோயிலிலும் முதல் தீபம் ஏற்றும் உரிமை புலையர் இனத்தாருக்கு உண்டு.

பண்டைய சேர மன்னராட்சி நிறைவு பெற்றது. அவர்கள் ஆட்சியில் பொன்னம்பல மேட்டு மலை உச்சியில் பேரொளிச் சுடர் ஏற்றும் உரிமையைக் குறிஞ்சி நில மக்கள் பெற்றிருந்தனர். கால மாறுபாட்டில் குறிஞ்சி நில மக்கள் ஆதிவாசிப் பழங்குடியினர் ஆகிவிட்டனர். அவர்களின் வாழ்வியல் முறைகளிலும் வெளியார் தாக்கம் ஏற்பட்டு விட்டது. எனினும் பண்டைய மரபுப்படி அம்மேட்டில் பேரொளிச் சுடர் ஏற்றி வருகின்றனர்.

திருவண்ணாமலை கார்த்திகைப் பெருவிழாவில், மலை மீது சோதியைப் பல்லாயிரவர் பணிந்து இறைஞ்சுவது போன்று, கேரளத்தில் மகர சோதி வழிபாடாக உருமாறிய கார்த்திகைத் தீப சோதியைத் தைத் திங்களில் வணங்கி அருள் பெறுகின்றனர்.

# நூலகங்கள் அறிவின் ஊற்றுகள்

*புலவர் சி. பாண்டுரங்கன்*
ஆம்பூர்

"புலவர்களே ! இலக்கிய ஆராய்ச்சி முடிவுகளால் மக்கள் வாழ்வை வளமாக்க வேண்டியது உங்கள் கடமை' என்ற பேரறிஞர் அண்ணாவின் விரல் நுனிகளுக்கு, வீணையின் நாத நரம்புகளாய்ப் பயன்விளைத்த நூல்கள், சென்னை (கன்னிமரா) நூலகத்தில் வரிசையில் தவம் இருந்தன; தவத்தின் பயனையும் அடைந்தன !

அறிவுலக மேதை முனைவர் அம்பேத்கர், 'பாரிஸ்டர் பயில , இலண்டனில் தங்கியிருந்த போது, நாளின் பெரும் பகுதியை, அருங்காட்சியக நூலகம் சென்று புத்தகங்களைப் படிப்பதற்காகவே செலவழித்து, முன்னேற்றப் பாதையில் விரைந்தார்.

14.9.1901இல் நான்காம் தமிழ்ச் சங்கத்தை மதுரையில் புகழுற நிறுவிய வள்ளல் பொன்.பாண்டித்துரைத்தேவர், தமிழின் நதியாயும் அறிவின் ஊற்றாயும் திகழும் நூலகத்தின் தேவையை உணர்ந்தே (சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, அச்சுக்கூடம் ஆகியவற்றோடு) நூலாராய்ச்சிச் சாலை, பாண்டியன் புத்தகசாலை ஆகியவற்றையும் அமைத்துப் புகழ் கொண்டார்.

நூற்றாண்டுகளுக்கு முன்பே கல்விச் செல்வத்தின் களஞ்சியமாகப் பயன்பட்ட சர்வகலா சாலைகளிலெல்லாம் ஆயிரக்கணக்கான ஏடுகள் / ஓலைச் சுவடிக்கட்டுகள் பாதுகாக்கப்பட்டிருக்க வேண்டும்.

தஞ்சை மன்னர் சரபோசி, இலக்கியம், மருத்துவம், இசை, விளையாட்டு, பலகலை பற்றிய தமிழ் மற்றும் பன்மொழி நூல்கள் / சுவடிக்கட்டுகள் தம் அரண்மனை நூலகத்தைப் பெருமைப்படுத்த, மனப்பூர்வமாக ஏற்பாடு செய்தாராம்.

நம் தாய்த்திருநாட்டின் பல்வேறு மொழிகளிலும் உருவாகும் நூல்களின் பேழையாக, தேசிய, மாநில, மாவட்ட, நகர, சிற்றூர் நூலகங்கள்; பல்கலைக்கழக, கல்லூரி, பள்ளி, பயிற்சி நிறுவனம் மற்றும் வீட்டு நூலகங்கள் திகழ்கின்றன.

இவை, தமிழ்ப்பயிர் வளர்ப்பதோடு, கல்விப் பயனையும் விளைவித்துக் கொண்டிருக்கின்றன!

''கடன் என்ப நல்லவை எல்லாம்'' என, வள்ளுவர் வழிச் சிந்தனை ஏற்று, அறவுள்ளத்தினர் உருவாக்கிய, பல்தொழில் நுட்ப, கல்லூரிக் கல்வி பயிலும் பலருக்கும், பருவ - ஆண்டுத் தேர்வு முடியும் வரை பாடநூல்கள் / பார்வை நூல்கள் தந்து உதவுகின்ற, புதுவகை நூல் நிலையங்களின் நற்பணி, கல்விச் செல்வம் மென்மேலும் வளர உரம் ஊட்டுவதாகவே அமைகிறது!

''எந்த வீட்டில் நூலகம் உள்ளதோ, அந்த வீட்டில் ஆன்மா உள்ளது'' என்றார் பிளேட்டோ, வாழ்நாளெல்லாம் கற்கும் கடமை கொண்ட மனிதனுக்கு, மாணவப் பருவம் நிறைவுபெற்ற பிறகும், கல்விச் சாலையாகக் கதவு திறந்து காத்திருப்பது, பொது நூல்நிலையமேயன்றோ?

இக்காரணத்தால்தான், ''ஒரு நூல் நிலையக் கதவு திறக்கும் போது, ஒரு சிறைச் சாலைக் கதவு மூடப்படுகிறது'' என்றார் சுவாமி விவேகானந்தர். ''புத்தகங்கள் நல்ல நண்பர்கள்'' என்றார் கதே.

தமிழ் நெஞ்சங்களெல்லாம் உவகை கொள்ளுமாறு, செம்மொழித் தமிழாய்வு நூலகமும், அண்ணா நூற்றாண்டு நூலகமும், தமிழ்ச் செம்மொழித் தாய்க்கு அரசு அணிவித்துள்ள புத்தம் புதிய அணிகலன்கள் அன்றோ?

கப்பலுக்குத் திசை காட்டும் கருவிபோல, மனிதனுக்கு நல்ல இலட்சியம் தேவை. அதனை உருவாக்குவதில் நூல் நிலையப் பயன்பாடு முக்கிய இடம் பெறும்.

''எழுத்துக்குப் பின் இதயம் இருக்க வேண்டும்'' என்றார் வால்டேர்.

நூலக நெடுஞ்சாலைகளாக விளங்கும் புத்தகக் கண்காட்சிகள், தம் நேசக்கரங்களை, வட்டத் தலைநகரங்கள் வரை நீட்டும் பொன் விடியலை ஆவலுடன் வரவேற்கக் காத்திருந்து, நூலகங்களுக்கு மெருகூட்டுவோமாக!

# அருள்மிகு இம்மையிலும் நன்மைதருவார் திருக்கோயிலும் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டும்

*முனைவர் பி. ஆறுமுகம்*
மதுரை

## முன்னுரை

மதுரை மாநகரில் பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து நேர்கிழக்காக, சுமார் நூறு மீட்டர் தூரத்தில் அமைந்ததுதான் அருள்மிகு இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் அமைந்துள்ள பொற்றாமரைக் குளத்தில் ஒரு கல்வெட்டு உள்ளது. இந்தக் கல்வெட்டுக்கும் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டை ஆண்ட மாறவர்மன் சுந்தரபாண்டிய மன்னனுக்கும் தொடர்பு இருப்பதுபோல் தெரிகிறது. இத்தொடர்பை ஆய்ந்து வெளிக்கொணர்வது இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

## தலப்பெருமையும் நிர்வாகமும்

அருள்மிகு இம்மையிலும் நன்மை தருவார் திருக்கோயில் இறைவன், மறுமையில் மட்டுமின்றி இம்மையிலேயே (இந்தப் பிறவியிலேயே) நன்மை தரக்கூடிய இறைவனாவான். இங்கு அருள்மிகு நன்மை தருவாரும், அருள்மிகு நடுவூர் நாயகியம்மனும் மூலதெய்வங்களாக எழுந்தருளி அருட்காட்சி தருகின்றனர். இத்திருக்கோயில் சிவகங்கை சமஸ்தானம், தேவஸ்தானம், பரம்பரை அறங்காவலர், மேதகு இராணி, து.ச.கா. மதுராந்தகி நாச்சியார் அவர்களின் நிர்வாகத்தில் செயல்பட்டு வருகிறது. இராமாயணத் தலைவன் இராமன் பூசித்த சிவலிங்கம் அமைந்துள்ள இடம் இராமேசுவரம் என்று அழைக்கப்படுவது போல் சைவ சமயக் கடவுளான சிவனே சுந்தரபாண்டியனாக உருமாறி சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து பூசித்த சிவலிங்கம் இங்கு அமைந்துள்ளதால் இவ்விடத்தைச்

சிவனேசுவரம் என்றும் பெயரிட்டு அழைப்பர். சிவலிங்கம் மேற்கு நோக்கிய திசையில் அமைந்திருப்பதும் மதுரை நகருக்கு நடுவில் அமைந்திருப்பதும் மூலவரைத் தரிசிக்க ஆண்கள் மேல் சட்டை அணியாமல் செல்ல வேண்டும் என்பதும் இத்திருக்கோயிலின் சிறப்பு அம்சங்கள் ஆகும்.

## பாண்டியர்காலக் கட்டடக் கலையும் நகரத்தார் நற்பணியும்

இத்திருக்கோயிலில் அமைந்துள்ள சோமஸ்கந்தர் போன்ற சிற்பங்கள் காஞ்சிபுரம், குடமலை, கடற்கரைக்கோயில் ஆகிய கோயில்களில் அமைந்துள்ளதைப் போல் உள்ளன. இவ்வூர்களில் அமைந்துள்ள சிற்பங்கள் இராசசிம்ம பல்லவன் காலத்துச் சிற்பங்கள் ஆகும். 'பல்லவர் காலத்துத் திருப்பணியைப் பின்பற்றி இத்திருக்கோயிலில் பல சிற்பங்களைப் பாண்டிய நாட்டை ஆண்ட பிற்காலப் பாண்டிய மன்னர்கள் உண்டுபண்ணியிருக்கிறார்கள் என்பதற்கும் பிற்காலத்தில் இத்திருக்கோயிலை நகரத்தார்கள் புதுப்பித்துள்ளார்கள் என்பதற்கும் இங்குள்ள கட்டடக்கலை சான்று பகர்கிறது'' என்கிறார் தொல்லியல் அறிஞர் வேதாசலம். இக்கருத்து இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

## பொற்றாமரைக்குளமும் கல்வெட்டும்

இத்திருக்கோயிலின் வடகிழக்கு மூலையில் ஒரு குளம் அமைந்துள்ளது. இக்குளம் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலைப் போல் பொற்றாமரைக்குளம் என்றே பெயரிட்டு அழைக்கப்பட்டு வருகிறது. ''இக்குளம் ஒரு இலட்சத்து இருபதாயிரம் கனஅடி கொள்ளளவு கொண்டது என்றும், கிருதமால் நதிமூலம் தண்ணீர் நிரம்பிய குளம் என்றும் அறியப்படுகிறது. 'இக்குளம் பௌத்தர்களின் கலைப்பாணியில் அமைக்கப்பட்டது போல் தோன்றுகிறது என்கிறார் நடனகாசிராசன். இக்குளத்தில் காந்திச்செட்டியார் குடும்பத்தினரும் தேவகோட்டை சந்திரன் செட்டியார் குடும்பத்தினரும் மராமத்து செய்தனர் என்பதை இக்குளத்தைச் சுற்றியுள்ள சுவற்றில் பொறிக்கப்பட்டுள்ள பிற்காலக் கல்வெட்டுக்களால் அறியலாம். மதுரைத் தலவரலாறு என்று அழைக்கப்படும் திருவாலவாயுடையார் கோயில் திருப்பணிமாலை,

*''தாமரைத் தாடகமுண் டாக்கியும்*

*...............*

*காளத்தி யப்ப மன்னனே'*

என்று கூறுவதால் இக்குளம் காளத்தியப்ப மன்னன் காலத்தில் கட்டப்பட்டது புலனாகிறது. இக்குளத்தில் வடமேற்கு மூலையில் மேலிருந்து கீழாக அமைக்கப்பட்டுள்ள படிகளில் 14வது படியில்,

*'மலைம ண்டலத்துக் கீழ்மலைஇ*
*ப(ண்)ணிநென் இக்கோயில் சில்பாசாரி*
*திருவாலவாய ஆசாரியன் எழுத்து'*

என்ற மூன்று வரிகள் கொண்ட எழுத்துக்கள் கல்வெட்டால் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டின் முதல்வரியில் 'மலைம' என்ற மூன்று எழுத்துக்களும், இரண்டாவது வரியில் 'ப' என்ற எழுத்தும், மூன்றாவது வரியில் 'திரு' என்ற இரண்டு எழுத்துக்களும் சிதைந்துள்ளன. அதாவது 'மலைமண்டலத்துக் கீழ்மலைஇ பண்ணிநென்' இக்கோயில் சிற்பாசாரி திருவாலவாய்யன் ஆசாரியன் எழுத்து என்பது இக்கல்வெட்டு வாசகங்களின் பொருளாகும். 'இக்கல்வெட்டு 12-13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டாகும். மலைமண்டலம் என்பது சேரநாடான கேரளாவைக் குறிக்கும். இரண்டாவது வரியில் கடைசி நான்கு எழுத்துக்கள் சிற்பவேலை செய்த ஆசாரியைக் குறிக்கும்' என்று தொல்லியர் அறிஞர் வேதாசலம் கூறுகிறார். அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயிலில் பள்ளியறையின் உள்ளே மேற்குப்புற உட்சுவற்றில்,

*'சிலாலேகை பண்ணிநென்*
*...............*
*வால வாயன் ஆசாரியன எழுத்து'*

என்ற வாசகங்கள் அமைந்துள்ள கல்வெட்டுகள் உள்ளன. அருள்மிகு நன்மைதருவார் திருக்கோயில் கல்வெட்டையும் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் கல்வெட்டையும் உற்றுநோக்கும் போது ஒரே சிற்பாசாரியால் செதுக்கப்பட்டிருப்பது புலனாகிறது. மேலும் கேரள நாட்டைச் சேர்ந்த சிற்பாசாரி இரண்டு திருக்கோயில்களிலும் பணிசெய்தார் எனவும் தெரியவருகிறது. மேலும்,

*'........ மலை மண்டலத்*
*திருவநந்த புரத்து ஸ்ரீபத்மநா*
*ப பெருமாளுக்கு காலிங்கராயன்*
*சந்நிதியும் (அசு) வழி சிறப்பும்*
*(நு)ந்தா விளக்கும்'*

என்ற வாணாதிராயர்கள் கல்வெட்டுக்களால் மலைமண்டலம் என்பது சேரநாடான கேரள மாநிலத்தைக் குறிக்கிறது என நன்கு அறியலாம். இக்கல்வெட்டும் 12-13ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டாகும். இச்செய்தி மேற்கூறிய செய்திக்கு அரண் சேர்ப்பதாக அமைகிறது.

*'வண்ட றைதார் வழுதியரைக்*

*கொண்ட பாண்டி மண்டலத்தை'*

என்ற மூன்றாம் குலோத்துங்கச் சோழனது மெய்க்கீர்த்தியை நோக்கும் போது பாண்டியநாடு பாண்டி மண்டலம் என்று அழைக்கப்பட்டதும் புலனாகிறது. எனவே அக்காலத்தில் மலைகள் சூழ்ந்திருந்த பகுதியாகச் சேரநாடு அமைந்திருந்ததால் 'மலைமண்டலம்' என்றும் பாண்டியர் ஆண்ட பகுதி 'பாண்டி மண்டலம்' என்றும் சோழர் ஆண்ட பகுதி 'சோழ மண்டலம்' என்றும் பெயர் வழங்கப்பட்டு வந்தன என்ற செய்தி புலனாகிறது. இனி நன்மை தருவார் திருக்கோயில் கல்வெட்டு மாறவர்மன் சுந்தர பாண்டியன் காலத்தைச் சேர்ந்தது என்பதைப் பின்வரும் சான்றுகளால் அறியலாம்.

## நன்மைதருவார் திருக்கோயிலும் மாறவர்மன் சுந்தரபாண்டியனும்

இத்திருக்கோயிலைச் சுந்தரபாண்டிய மன்னன்தான் கட்டினான் என்பதை,

*'திருநடு வூர்த்தென் மதுரையிற் செய்த திருநகரின்*

*மருவிய கோயிலொன் றுண்டாக்கி யேயிம் மையினன்*

*தருசிவ லிங்கப் பதிட்டைசெய் தர்ச்சனை தானுஞ் செய்தான்*

*பருமலை யன்னசெம் பொற்புயன் சுந்தரபாண்டியனே'*

என்று மதுரைத் தலவரலாறு கூறுகிறது. 'நன்மை தருவார் திருக்கோயில் சுந்தரமாறர் பூசித்த தலம் என்றும் இது மேலமாசிவீதிக்கு மேற்கேயுள்ளது' என்றும் அபிதான சிந்தாமணியிலும் செய்தியுள்ளது. அருள்மிகு 'நன்மை தருவார் திருக்கோயிலில் மாறவர்மன் சுந்தரபாண்டியன் திருப்பணி செய்தான்' என்றும் கோயில் மாநகர் என்ற நூலில் அ.கி. பழநியப்பனும் கூறுகிறார். 'கி.பி. 12ஆம் நூற்றாண்டில் (1231) மாறவர்மன் சுந்தரபாண்டியன் மதுரை அரண்மனையில் அரசனாக வீற்றிருந்தான்' என்று ஸ்ரீவில்லிபுத்தூர்க் கோயிலில் கல்வெட்டுச் செய்திகள் உள்ளன. எனவே மேற்கூறிய சான்றுகளால் அருள்மிகு நன்மை தருவார்

திருக்கோயில் கல்வெட்டு கி.பி. 12-13ஆம் நூற்றாண்டில் பாண்டியநாட்டை ஆட்சிசெய்த மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் பொறிக்கப்பட்டன என்ற ஆய்வு முடிவுக்கு வரமுடிகிறது.

## முடிவுகள்

1. சேரநாடு 'மலைமண்டலம்' என அழைக்கப்பட்டிருக்கின்றது.

2. சேரநாட்டில் பல மலைகள் இருப்பதால் மேல்மலை, கீழ்மலை என கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டிருக்கின்றன.

3. கி.பி. 12ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டை ஆட்சிசெய்த மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலிலும் கேரளநாட்டைச் சேர்ந்த ஒருவர் சிற்ப வேலைகளையும் கல்வெட்டுப் பொறிக்கும் பணிகளையும் செய்துள்ளார்.

4. மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் வடிவமைக்கப்பட்ட கற்கள், காளத்தியப்ப மன்னன் காலத்தில் நன்மை தருவார் திருக்கோயிலில் பொற்றாமரைக்குளம் அமைக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

5. பொற்றாமரைக்குளக் கல்வெட்டு பாண்டியர் காலத்தில் வேறு இடத்தில் இருந்திருக்க வேண்டும். அதனால்தான் எஞ்சிய துண்டுக்கல்வெட்டுக்கள் அமைந்த கற்கள் காணக்கிடைக்கவில்லை.

6. சிலாலேகை என்பது கல்வெட்டுப் பொறிக்கும் பணியைக் குறிக்கும்.

7. இந்த ஆய்வுக் கட்டுரையால் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கும், அருள்மிகு நன்மை தருவார் திருக்கோயிலுக்கும் மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்குமிடையே இருந்த உறவுநிலை நன்கு வெளிப்படுகிறது. எனவே அருள்மிகு மீனாட்சி தெய்வத்திற்கும் இந்த அரசனுக்கும் ஏதோ ஒரு அழுத்தமான தொடர்பு இருந்திருக்க வேண்டும்.

# குறுந்தொகை உணர்த்தும் ஓர் ஐயப்பாடு

*முனைவர் இந்திராகாந்தி*
தஞ்சாவூர்

சங்க கால மக்கள் காதலையும், வீரத்தையும் உயிரினும் உயர்ந்ததாக எண்ணி வாழ்ந்தார்கள். சங்க இலக்கிய அகப்பாடல்கள் காதலைப் பற்றியவை ஆயினும் காதலை உள்ளடக்கிய வாழ்க்கையைப் பற்றிய கண்ணோட்டத்தை எடுத்துக் கூறுபவையாக அமைந்துள்ளன.

## சங்க காலமும் பெண்ணும்

சங்க காலச் சமுதாயம் பெண்ணிற்கு மதிப்பளித்து உயரிய நிலையில் வைத்துப் போற்றியது. ஔவை என்ற அருமைப் பெண் புலவர் அதியமானுக்கு அவைக்களப்புலவராக விளங்கி பல நன்னெறிகளை அவனுக்குக் காட்டி அவனுக்கு அருமையானதொரு தூதுவராகச் செயல்பட்ட விதத்தினை அவரின் பல புற நானூற்றுப் பாடல்கள் நமக்கு விளக்குகின்றன. அதுமட்டுமின்றி காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் போன்ற பெண்பால் புலவர்கள் ஆண் புலவர்களுக்கு இணையாக அருமையான பாடல்களை நமக்கும் நம் அருந்தமிழுக்கும் அளித்துள்ளனர். இத்தகைய சமூக வாழ்வில் பெண்கள் தனக்குப் பிடித்த ஆண் மகன் ஒருவனைக் காதலித்து மணம் முடித்த செய்திகளைப் பல சங்கப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

## காதல் என்றொரு காவியம்

காதல் கொடுப்போரும் கொள்வோரும் இன்றித் தலைவனும் தலைவியும் நல்வினையால் தாமே கூடுதலாகும். இதற்கு இயற்கைப் புணர்ச்சி என்று பெயர். இயற்கைப் புணர்ச்சியின் இலக்கணத்தைத் தொல்காப்பியம்,

*'ஒன்றே வேறே என்றிரு பால்வயின்*
*ஒன்றி உயர்ந்த பால தாணையின்*

*ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப*
*மிக்கோ னாயினும் கடிவரை இன்றே'*

என்று எடுத்துரைக்கின்றது.

ஒருவனும் ஒருத்தியும் இல்லறஞ் செய்துழி அவ்விருவரையும் மறுபிறப்பினும் ஒன்றுவித்தலும் வேறாக்குதலுமாகிய இருவகை ஊழினும் இருவருள்ளமும் பிறப்பு தோறும் ஒன்றி நல்வினைக் கண்ணே நிகழ்ந்த ஊழினது ஆணையின் ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப காதல் மலரும் இதுவே இயற்கைப் புணர்ச்சி.

இப்படி அரும்பிய காதல் நாளும் வளர்கிறது. வளர்ந்து ஒரு கட்டத்தில் திருமணம் முடிவுற்றுக் களவு வாழ்விலிருந்து கற்பு நெறிக்குச் செல்வதாக வாழ்க்கைப் போக்கு அமைய வேண்டும். தலைவனும் தலைவியும் அப்பழுக்கற்ற அன்பைச் செலுத்திக் காதலித்து வருகின்றனர். ஒரு குறுந்தொகைப் பாடல் தலைவி தலைவன் மீது கொண்ட காதலை,

*'நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று*
*நீரினும் ஆரள வின்றே சாரல்*
*கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு*
*பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே''*

என்று தலைவி தலைவன் மீது கொண்ட காதலின் ஆழத்தை விளக்குகின்றது. இப்படி உணர்வுப் பூர்வமாகத் தலைவனைக் காதலித்த தலைவி தலைவனால் ஏமாற்றப்பட்டு மனமுடைந்தாள் என்றோ அல்லது தலைவன் வேறொரு பெண்ணையோ தலைவி வேறோர் ஆணையோ மணந்தாள் என்றோ ஒரு பாடலைக் கூட நாம் காணமுடியாது. ஆனால் ஒரு பாடல் தலைவனால் ஏமாற்றப்பட்ட தலைவி அன்று இருந்திருக்கலாமோ என்று எண்ணத் தோன்றும் வகையில் உள்ளது. இதோ அந்தக் குறுந்தொகைப் பாடல்,

*'யாரும் இல்லைத் தானே கள்வன்*
*தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ*
*தினைத்தாள் அன்ன சிறுபசுங் கால*
*ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்*
*குருகும் உண்டு தான் மணந்த ஞான்றே'*

என்ற கபிலரின் பாடல் தலைவியானவள் தன் தோழியிடம், தலைவன் என்னைக் கனவில் மணந்த பொழுது அவ்விடத்தே சான்றாகத் தக்கார் ஒருவரும் இலர். அவரே தாம் கூறிய சூளுறவு பொய்ப்பாராயின் யான் பின்னர் என்ன செய்ய வல்லேன். ஒடா நின்ற நீரின் கண்ணே உணவின் பொருட்டு ஆரல் மீன் வரவினைக் கூர்ந்து நோக்கும் தினையின் தாளினைப் போன்ற சிறிய பசிய கால்களையுடையனவாகிய நாரைகளும் ஆண்டுளவாயின என்று தலைவி கூற்றாக அமைந்தப் பாடலின் மூலம் நாம் அறியும் செய்திகளாகத் திகழ்வது தலைவி தான் கொண்ட காதலுக்குச் சாட்சி யாரும் இல்லை, அவன் ஒருவேளை அவளுக்கும் அவனுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று கூறிவிட்டால் என்ன செய்வது என்று ஒரு தலைவி எண்ணுகிறாள் என்றால் அச்சமூகத்தில் இவளைப் போன்ற தலைவி ஒருத்தி தலைவன் ஒருவனால் ஏமாற்றப்பட்டு இருந்திருக்கலாமோ? என்று நம்மிடம் சந்தேக உணர்வைத் தோற்றுவிப்பதாக இப்பாடல் அமைந்துள்ளது. இப்படிப்பட்ட சமூகம் எப்படி ஆரோக்கியமான சமூகமாக இருந்திருக்க முடியும். தலைவியின் வீட்டார் ஒருவேளை காதலித்த தலைவியைத் தர மறுத்தால் ஒரு ஆண்மகன் மடலேறி அவளை மணக்கும் சமூக அமைப்பு இருந்தது. ஆனால் ஓர் தலைவி தலைவன் வீட்டாரோ அல்லது தலைவனோ அவளை மணக்க மறுத்தால் அவள் மடலேறுதல் போன்ற செய்ல்களைச் செய்யும் நெறி இல்லை என்பதனைத் தொல்காப்பியம், ,

*'எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்*
*பொற்புடை நெறிமை இன்மை யான''*

என்று குறிப்பிடுகிறது.

பொலிவுறு நெறிமை இல்லாமையான் எல்லாக் குலத்தினிடத்தினும் மகடூஉ மடல்மேல் இல்லை, பெண்பால் மடலேறுதல் இல்லை என்று விளக்கம் தருவார் உரையாசிரியர்.

ஒருவேளை தலைவனால் தலைவி ஏமாற்றப்பட்டால், அவளின் நிலை என்ன? அவள் யார் துணைதனை அன்று நாடியிருப்பாள் என்பதே இப்பாடல் என்னுள் எழுப்பிய சந்தேகம் ஆகும்.

# பரிதிமாற் கலைஞர்

*திருமதி. கிரிஜா ராகவன்*
கோவை

"பரிதியைப் போன்று ஒளியைப் பெற்று, மாலாகிய திருமாலைப் போன்று தமிழைக் காத்து, தனித் தமிழில் தன் பெயரினை மாற்றிய பரிதிமாற் கலைஞரைப் போற்றுவோம்.

பரிதிமாற் கலைஞரைத் தெரியாதவர் இலர். பலர் பாடப்புத்தகங்களின் வாயிலாகவும் தெரிந்து கொண்டு இருப்பர். தமிழ்ப் பற்றின் காரணமாகத் தமிழைத் தனிமொழியாகவும், உயர்தனிச் செம்மொழியாகவும் விளங்கச் செய்தவர். அவர் புல புத்தகங்கள் இயற்றியுள்ளார். அவற்றுள் சில இளங்கலைக்குப் பாடப்புத்தகமாகவும் அமைந்துள்ளன.

சங்கம் வளர்ந்த மதுரை மாநகரில், விளாச்சேரியில் கோவிந்த சாஸ்திரிக்கும் – நல்லம்மா என்பவருக்கும் 1870ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11ந் தேதி விளாச்சேரியில் பிறந்தார். இவருக்கு இரண்டு மகன்கள் ஒரு மகளும் உண்டு. இரு மகன்களுக்கும் தமிழில் ஈடுபாடு இருந்தது. மருத்துவராக இருந்த மகன் தமிழில் நிறைய எழுதி பரிசுகளும் வாங்கி இருக்கிறார், இரண்டாவது மகன் தந்தையின் புத்தகத் தொகுப்புக்களைச், சேகரித்து ஒழுங்குபடுத்தி, அச்சிட்டு, உலகறியும்படிச் செய்துள்ளார்.

.இவர் தன் தந்தையிடமே, வடமொழியும் மகா வித்துவான் சபாபதி முதலியாரிடம் தமிழும் பயின்றார். இவர் கிறித்துவக் கல்லூரியில் இளங்கலையில் தத்துவத்திலும், தமிழிலும் முதல் மாணவனாகத் திகழ்ந்தார். இவர் தத்துவத்தில் முதுகலைப் பட்டம் பெற்றவர். அதனால் இவரைத் தத்துவப் பேராசிரியராக இருக்கும்படி கல்லூரி நிர்வாகம் கேட்டுக் கொண்டது. ஆனால் தமிழின் மீது பற்றுக் கொண்டுள்ளதால், தானே விரும்பி தலைமைத் தமிழ்த் துறையாளராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டார். அவ்வமயம், அவர் நிறைய புத்தகங்களை எழுதினார்.

பரிதிமாற் கலைஞர் தான் எடுக்கும் பாடங்களைச் செந்தமிழ் நடையில் சுவைபட விவரிக்கும் ஆற்றல் பெற்றவர். இவர்தம் உரையைக்

கேட்ட 'ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம்' பேராசிரியர் பதவி வழங்க முன் வந்தது. தமிழ் மீது கொண்ட பற்றினால், பரிதிமாற் கலைஞர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. தன் இல்லத்திலேயே, மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்து அவர்களுக்கு 'இயற்றமிழ் மாணவர்' என்று பட்டப் பெயரும் சூட்டியவர்.

அவர் தலைமைத் தமிழாசிரியராக விளங்கிய காலத்தில்தான் சுவாமி வேதாசலம் (மறைமலை அடிகள்) தமிழ் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். யாழ்ப்பாணம் தந்த பெரும்புலவர். சி.வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் பரிதிமாற் கலைஞரின் தமிழ்ப் புலமையைப் பார்த்துத் 'திராவிட சாத்திரி' என்ற பட்டப் பெயரைச் சிறப்புப் பட்டமாக அளித்தார் என்பது பெருமை மிக்க செயல். இதிலிருந்து பரிதிமாற் கலைஞரின் தமிழ்ப் பற்றை என்னவென்று சொல்வது?

இயற்றமிழில் வல்லுநராக இருந்த இவர் இசைத் தமிழிலும் சிறப்புற்று விளங்கினார். இவர் இயற்றிய 'மான விஜயம்' என்ற நாடகத்தைச் செய்யுள் வடிவத்தில்தான் அமைத்துள்ளார். அந்தச் செய்யுளை ராகம், தாளம் அமைத்து, இசை வடிவில் அமைத்துத் தந்தார் பரிதிமாற் கலைஞர். இது இளங்கலைக்குப் பாடமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ரூபாவதி, கலாவதி போன்ற நாடகங்களை இயற்றியதோடு அல்லாமல், பெண்பால் வேடம் புனைந்து, நடித்து, நாடகக் கலை வளர்ச்சிக்கும் துணை புரிந்தார். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் ஒருங்கே சேரப் பெற்று, முத்தமிழும் வளர்வதற்கு உறுதுணையாய் இருந்தவர். வடமொழி நிறைந்து காணப்பட்டதால், தமிழுக்கு முக்கியத்துவம் இல்லாது போய் விடுமோ என்று அஞ்சித் தமிழின் தனித்தன்மையை உலகறியப் பறை சாற்றினார்.

இவர் எழுதிய ஈரேழு வரிகள் கொண்ட 'தனிப்பாசுரத் தொகை' என்னும் நூலை ஜி.யு. போப் அவர்கள் படித்துப் பாராட்டி, 'மறுமலர்ச்சி நூல்களில் இதுவும் ஒன்று என்று கூறியுள்ளார். அவ்வமயம்தான், தன் பெயரைத் தனித் தமிழில் மாற்ற வேண்டும் என்று எண்ணம் கொண்டார். வடமொழியில் உள்ள சூரியன் (பரிதி) நாராயணன் (மால்) சாத்திரி (கவிஞர்) என்ற பெயரைப் பரிதிமாற் கலைஞராக மாற்றிக் கொண்டதுடன், தமிழ்ச் சங்கத்தாரின் செந்தமிழ் ஏட்டிலும் தன் பெயர் மாற்றத்தைத் தெரிவித்தார். இவருடைய அயராத உழைப்பினால் தமிழ் பிறமொழிகளின் கலப்பின்றி, தனித்தமிழாக விளங்கியது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

இவர், கலாவதி, ரூபாவதி, தமிழ் மொழியின் வரலாறு. மான விஜயம், பாவலர் விருந்து தனிப்பாசுரத் தொகை, நாடகவியல், மதிவாணன் தமிழ்ப் புலவர் சரித்திரம், தமிழ் வியாசங்கள், ஸ்ரீ மணியசிவனார் சரித்திரம், சித்திர கவி விளக்கம், கிளைவ் முதல் ராஜாஜி வரை போன்ற பல நூல்களை இயற்றியுள்ளார். இதில் கலாவதி, ரூபாவதி, மானவிஜயம், தமிழ் மொழியின் வரலாறு இவை இளங்கலைக்குப் பாடமாக வைக்கப்பட்டு இருந்தன.

இவர் பஞ்சகச்சம், கோட்டு, டர்பன் நெற்றியில் குங்குமப்பொட்டு இந்த அலங்காரத்துடன்தான் வலம் வருவார். உற்றார், உறவினரிடம் மிகவும் அன்பாகவும், பண்பாகவும் இருப்பார். இவர் தமிழ் நாட்டை 'குமரிநாடு' என்று கூறுவதில் பெருமிதம் அடைந்தவர்.

தமிழ் மொழியில் வினைக் குறிப்பு, வினைத்தொகை போன்ற சொல் இலக்கணங்கள், உயர்திணை, அஃறிணை போன்ற சொற் பாகுபாடுகள், அகம், புறம் என்ற பொருட் பாகுபாடுகள், குறிஞ்சி, வெட்சி போன்ற திணைப் பாகுபாடுகள், வெண்பா முதலிய பாக்களின் செய்யுள் இலக்கணம் இவை யாவும் தமிழ் மொழியில் தான் சிறந்து விளங்கியுள்ளன என்றும், தமிழின் தனித் தன்மை இதுதான் என்றும் உறுதிபட எடுத்து இயம்பியவர் பரிதிமாற் கலைஞர்.

திருந்திய பண்பும், சீர்த்த நாகரிகமும், பொருந்திய தூய மொழி புகழ் செம்மொழியாம்' எளிதில் புரிந்து கொள்ளும் தன்மையும், ஒருவர் பேசுவதை மற்றவர் புரிந்து கொள்ளும் தன்மையும் தமிழில் பேசும் சமயம் மேற்கோள்களும், தமிழில் இருந்தே காட்டப்படும் தன்மையையும் உடைய தமிழ் மொழி, 'உயர்தனிச் செம்மொழி' என்பதை உலகுக்கு உரைத்த செம்மல் பரிதிமாற் கலைஞரே.

தமிழுக்காகவே வாழ்ந்த இவர் 1903இல் நவம்பர் 2ந் தேதி காசநோயினால் இறைவனடி சேர்ந்தார். முப்பது வயதிற்குள் தன்னையே முழுமையாய் தமிழுக்கு ஈந்தவர் பரிதிமாற் கலைஞர். அவர் இன்னும் சிறிது காலம் வாழ்ந்திருந்தால், தமிழையும் வளமுற்று வாழச் செய்திருப்பார் என்பது எண்ணம்.

*வாழ்க தமிழ்! வளர்க தமிழ் !*

# ஒளவை சு.துரைசாமிப் பிள்ளையின் அருட்பா உரைமரபுகள்

திருமதி. தி. கவிதா
அண்ணாமலை நகர்

## முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் கி.பி. ஆறாம் நூற்றாண்டு பக்தி இலக்கியத்தின் பொற்காலம் என்றழைக்கப்பட்டது. இக்காலம் சைவ சமயம் தழைத்தோங்கிய காலம், நாயன்மார்கள் திருமுறைகளைப் பாடியதும், இறைவழி பாட்டினைத் தீவிரமாக உலகோர் அறிய வழிவகை செய்ததும் இக்காலத்தில்தான். அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நான்கு சமயக்குரவர்களும் இலக்கிய இசைப் பாடல்களின் வழி சைவத்தை வளர்த்தவர்கள்.

இவர்களைத் தொடர்ந்து கி.பி. 19ஆம் நூற்றாண்டில் தலை சிறந்த சைவ இலக்கிய வாதிகளுள் குறிப்பிடத்தக்கவர் வள்ளலார் என்று போற்றப்பெறும் இராமலிங்க அடிகளார். இவர் சமயக் குரவர் விட்டுச் சென்ற சைவ மார்க்கத்தைச் சமரச சன்மார்க்கம் என்று தனிப்பாதை வகுத்து சைவ சமயத்தை ஓங்கச் செய்தவர்.

வள்ளற் பெருமானின் அருட்பாக்களை ஆறு திருமுறைகளாக வகுத்து அன்பர்கள் பலரும் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு பதிப்புகளைக் கொண்டு வந்து பெருமை பெற்றுள்ளார்கள். வள்ளலாரின் கோட்பாடுகளை உலகறியச் செய்யும் நோக்கில் திருவருட்பாவிற்குச் சித்தாந்த கருத்துக்களுடன் விரிவான உரை எழுதி விளக்கம் அளித்தவர் பேராசிரியர் சிந்தாந்த கலாநிதி ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் ஆவர்.

*"நூலுக்கு நூலருமை காட்டுவதில் நூண்ணறிஞன்*
*மேலுக்குச் சொல்லவில்லை வேர்ப்பலாத் - தோலுக்குள்*

*உள்ள சுளை கொடுக்கும் உண்மை உழைப்பாளன்*
*அள்ளக் குறையாத ஆறு''*

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரால் போற்றப் பெறுபவர் 'உரைவேந்தர்' ஔவை துரைசாமிப்பிள்ளை.

## ஔவை சு. துரைசாமிப்பிள்ளையின் உரையாசிரியர் பணி

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கண இலக்கியங்களை இன்றைய இளைஞர்களும் புரிந்துகொண்டு நுகர உதவுவது அவற்றுக்கு எழுதப்பட்ட பல்வேறு உரைகள் தாம். மூலநூலினை வாசகனுக்கு எளிதில் புரியும் படிச் செய்து அதனைப் பரந்துபட்ட வாசகர்களின் தளத்திற்குக் கொண்டு செல்வதில் உரையாசிரியர்களின் பங்கு மகத்தானது என்று கூறலாம். சில இலக்கியப் படைப்புகள் மக்களிடையே பரவலான ஏற்பினைப் பெற்றமைக்கு உரையாசிரியர்கள் முக்கிய காரண கர்த்தாக்களாகத் திகழ்கின்றனர். நவீன இலக்கியங்களில் சிலவற்றை விமர்சிப்பவர் மீண்டும் மீண்டும் திறானய்வு செய்து எழுதியதின் காரணமாக அவை பரவலான செல்வாக்கினைப் பெற்றன.

இவ்வகையில் ஈடுபடுகிறவர்களின் பணி குறிப்பிடத்தக்கது. இதே போன்று பழைய இலக்கியங்கள் செல்வாக்குப் பெற உரையாசிரியர்கள் காரணம். முத்தொள்ளாயிரம் நூலுக்கு எழுதப்பட்ட ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியாரின் உரையும், வித்துவான் சேதுரகுநாதனின் உரையும், முத்தொள்ளாயிரம் நூலை மிகவும் பிரபலமாக்கின. இவ்வகையில் ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை போன்ற உரையாசிரியர்கள் பணிகள் மிகவும் தமிழ் உலகிற்கு இன்றியமையாதவை.

உரையாசியர்களின் பணிகளுள் தலைசிறந்தது அவர்கள் மூல நூலின் உண்மைத் தன்மையை வெளிக்கொணர்வதாகும்.

''உரையாசிரியர்களின் பணி பிறிதொரு வகையிலும் அமைகின்றது. என்றோ ஒரு காலத்தில் குறிப்பிட்ட அரசியல், சமூகச் சூழலில் எழுதப்பட்ட ஓர் இலக்கிய படைப்பினை, பின்னர் வந்த உரையாசிரியர் தன் காலத்தின் சூழல்களுக்கு ஏற்ப வாசிக்கிறார். ஒரே

நூலுக்குப் பல்வேறு உரைகள் தோன்ற இதுவே காரணம். திருக்குறளுக்குப் பதின்மர் உரை வரைந்தும் இன்றைய காலத்திலும் பலர் உரை எழுத முதல் காரணம் ஒவ்வொருவரும் திருக்குறளை ஒவ்வொரு முறையில் வாசித்தனர் என்பது தான். எவ்வாறாகிலும் இலக்கியங்களுடன் அவற்றின் உரைகளும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாகி விடுகின்றன.''

## ஔவை உரை பொது அமைப்பு

ஔவை.சு. துரைசாமிப்பிள்ளையவர்களின் உரைப்பகுதியில் ஒரு பொதுத் தன்மையைக் காணலாம். முதற்கண் பாடலுக்கு மேலே ஓர் அறிமுகப்பகுதி இருக்கும். அது பாடலின் உள்ளே நுழைய வாசகனுக்கு ஒரு நுழைவாயில் போலப் பாடலின் சூழலை விளக்கி உதவுகின்றது. இரண்டாவதாகப் பாடல் இடம்பெறும். மூன்றாவதாகப் பாடலின் ஒவ்வோர் அடிக்கும் விளக்கம் தரும் உரைப்பகுதி அமைந்திருக்கும். நான்காவதாக நீண்ட பாடலின் மையமான சொற்களை எடுத்துக் கோர்த்து வினைமுடிவு கொள்ளச் செய்யும் பகுதி அமைகிறது. இது ஒரு நீண்ட பாடலை ஒரு சொற்றொடர் போல அமைத்துக்காட்டி விடும். ஐந்தாவதாகப் பாடலின் சிறப்புக்களைத் தெரிவிக்கும் விளக்கம் எனும் பகுதி அமைந்திருக்கும். இத்தகைய அமைப்பினை அநேகமாகப் பல பாடல்களின் உரையில் காணலாம். பாடலின் தேவையை ஒட்டி இவற்றில் ஒன்றிரண்டு குறைந்து காணப்படலாம். இந்த அமைப்பு முறையானது ஔவை சு.துரைசாமிப்பிள்ளையவர்களின் முறையியல் (Method) அறிவைத் தெளிவுபடுத்துகிறது.

## விளக்கம் கூறுதல் முன்னைய உரைக்கு மறுப்பு

உரையின் ஐந்தாவது பகுதி பிள்ளையின் கடின உழைப்பினையும் பல்துறை அறிவையும் பறைசாற்றும் பகுதி, தேருடன் முல்லை கீது என்பதற்குத் தேருடன் புரவியும் முல்லைக்கு ஈந்த என்று பழைய உரைகாரர் கூறும் உரையை மென்மையாக மறுக்கிறார். இவ்வாறு கூறுவது முல்லைக்கொடியின் நிலை கண்டு, பிறந்த அருளால் முன்பின் நினையாது உடனே தேரை ஈந்தாரின் ஒன்றியமின் சிறப்பாக இருக்கும்.

(புறநானூறு ப. 3) தேருடன் என்பதற்குப் பழைய உரைகாரர் கூறும் விடை ஒளவையின் விளக்கம் சிறப்பாக இருப்பதை உணரலாம்.

## சொற்களுக்கு வெளியே நின்று விளக்குதல்

உரையாசிரியர் என்பவர் சொற்களுக்குப் பொருள் கூறுபவர் மட்டுமல்ல சொற்களுக்குப் புறமாக நின்றிருக்கும் மெய்ம்மைகளையும் எடுத்துரைக்க வேண்டிய கடப்பாடுடையவர். மேற்காட்டப் பெற்ற புறநானூற்றுப் பாடலில் வடபால் முனிவர் என்பதற்கு, 'விசுவபுராணசாரம் என்னும் தமிழ் நூலையும் இரட்டையர் செய்த தெய்வீகவுலாவையும் துணையாகக் கொண்டு, வடபால் முனிவர் என்றது சம்பு முனிவராக இருக்கலாம் என டாக்டர் உ.வே. சா. ஐயரவர்கள் ஊகிக்கின்றார்கள்' என்று ஒளவை சு. துரைசாமிப்பிள்ளை விளக்கம் தருகிறார்''.

## பிற துறையறிவு

ஒளவை. சு.துரைசாமிப்பிள்ளையவர்கள் இலக்கிய அறிவுடன் கல்வெட்டு, வரலாறு, தொல் பொருளாய்வு முதலிய துறைகளிலும் புலமை பெற்றவராக விளங்கினார் என்பதை அவரது உரைகளின் வழியே அறியப்படுகின்றது. 'உலரா என வகையாண்டு' என்ற தொடருக்குக் கல்வெட்டுச் சான்றுகளை எடுத்துக்காட்டி துவரை என்பது மைசூர்ப் பகுதியிலுள்ள துவார சமுத்திரம் என்று நிறுவுகிறார். இத்துவாரசமுத்திரம் பகுதியில் ஆண்டு வந்த வேளிர்கள்தாம் காலப் போக்கில் தமிழகத்தின் வடபகுதியில் மன்னர்களாகத் திகழ்ந்தனர் என்பதை ஒளவையவர்கள் நிறுவுகின்றார். இதன் மூலம் ஒளவையின் பன்முக அறிவு நலம் புலப்படுகின்றது.

## பல்வேறு தரவுகளைச் சோதித்தறிதல்

புலிகடிமால் என்பதற்குக் கூறப்பட்ட மூன்று விளக்கங்களையும் சீர்தூக்கிப் பார்த்து ஒரு முடிவுக்கு வருகின்றார். அந்நாளில் அப்பகுதியை ஆண்ட ஆந்திர சாதவாகன வேந்தரில் புலிமால் என்பான் சிறந்து விளங்கினமையின் ஒரு தரம் அவனை வென்றது பற்றி இளங்கோவேள் புலிகடிமால் எனப்படுவானாயினான் என்றும் கொள்ளலாம். மேனாட்டு யவனரான தாலமியும் இப்புலிமால் வேந்தனைக் குறித்துள்ளார். புலுமாவி

புலிமாயி எனக் காணப்படினும் கன்னட மொழியில் அது புலிமெய் என வழங்கும் என்று, புலி போலும் மெய்வலிமையுடைனென்பது பொருளென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இவற்றால் 'ஹொய்சலர்' கதையிலும் இது பொருத்தமாதல் காணப்படும் என்று ஔவை சு. துரைசாமிப்பிள்ளை தீர்வு கூறுகின்றார்.

## உரைமுடிவு

"ஔவை துரைசாமிப்பிள்ளையவர்கள் பாடலுக்கு உரைவரையும் போது, எந்த ஒரு சிறிய விஷயத்தினையும் எளிதில் தவறவிட்டு விடாமல் உரிய முதன்மை அளித்து விளக்கம் தரும் பாங்கினை இதன் வழி உணரமுடிகிறது. இப்புலிகடிமால் வழிவந்த கடுங்கோ வேளிர்களுள் பலர் புதுக்கோட்டைப் பகுதியில் வாழ்ந்திருந்தனரென அப்பகுதியிலுள்ள கல்வெட்டுகள் காட்டுகின்றன, என்று பாடலுக்குரிய வரியை முடிக்கிறார். பறம்பு மலைப் பகுதியிலிருந்து சென்றிருக்கக் கூடும் என்பது நன்கு ஏற்புடையதாகத் தோன்றுகிறது.

பல்துறைப் புலமை, உண்மை ஆயும் வேட்கை, நேர்மை, மறுப்புக் கூறும்போது இனிமை, எளிமை, முறைப்படுத்திக் கூறுதல், முழுமையாகக் கூறுதல் போன்ற பண்புகளால் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரை வேந்தராகத் திகழ்கின்றார் என்பதை அறிய முடிகின்றது.

## முடிவுரை

ஔவை சு. துரைசாமிப்பிள்ளையின் அருட்பா உரைமரபுகள் பற்றி பல்வேறிடங்களிலும் காணமுடிகிறது. உரையாசிரியர் பணி, உரை பொது அமைப்பு, முன்னைய உரைக்கு மறுப்பு, சொற்களுக்கு வெளியே நின்று விளக்குதல், பிறதுறையறிவு, பல்வேறு தரவுகளைச் சோதித்தறிதல், உரைமுடிவு போன்றவற்றை சுட்டிகாட்டிச் செல்வதைப் பின்வரும் பகுதிகள் தெளிவு படுத்துகின்றன என்பதை இதன் வழியாக அறிய முடிகின்றது.

# பதிற்றுப்பத்து

*முனைவர் கி. கௌரி*
சேலம்

பத்துச் சேர அரசர்களைப் பற்றி பத்துப் புலவர்கள் பத்துப் பத்துப் பாடல்களால் பாடிய பாடல்களின் தொகுப்பே பதிற்றுப்பத்து. இதில் காணப்படும் ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு சேர அரசனைப் பற்றிப் பாடப்பட்டதாகும். இதனால்தான் இது பதிற்றுப்பத்து என்னும் பெயர் கொண்டது. இவற்றுள் முதல் பத்தும், இறுதிப் பத்தும் கிடைக்கவில்லை.

இந்நூல் முதன் முதலில் கி.பி. 1904இல் உ.வே.சாமிநாதையரால் வெளியிடப்பட்டது. பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் எவையெவை என்று தெரியாத காலத்தில் இந்நூல் இவருக்குக் கிடைத்ததென்றும், முதன் முதலில் திருவாவடுதுறை மடத்திலிருந்து கிடைத்த ஏட்டுப் பிரதிகளிலேயே இதனைக் கண்ணுற்றார் என்றும் இவர் இந்நூலின் மூன்றாம் பதிப்பின் முகவுரையில் கூறுவார். பதிற்றுப்பத்தில் ஆறு கையெழுத்துப் பிரதிகள் இவருக்குக் கிடைத்தனவென்றும், இவற்றுள் இரண்டில் மட்டுமே குறிப்புரை இருந்ததென்றும் இவர் குறிப்பிட்டுச் சொல்லுவார்.

இதற்குப் பின்னர் கி.பி. 1920இல் இரண்டாவது பதிப்பும், 1941இல் மூன்றாவது பதிப்பும், பின்னர் பல்வேறு மறுபதிப்புகளும் வெளியாகியுள்ளன. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பதில் சைவ சித்தாந்தக் கழகம், ஔவை சு.துரைசாமிப் பிள்ளையால் எழுதப்பட்ட உரையுடன் இந்நூலை வெளியிட்டது. இதை அடுத்துப் பல மறுபதிப்புக்கள் கழகத்தாரால் வெளியிடப்பட்டுள்ளன.

இந்நூலின்கண் உதியஞ்சேரலின் வழிவந்த இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழுகுட்டுவன், களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன், ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் ஆகியோரை முறையே குமட்டூர்க் கண்ணனார், பாலைக் கௌதமனார், காப்பியாற்றுக் காப்பியனார், பரணர், காக்கைப்பாடினியார், நச்செள்ளையார் ஆகியோரும், அந்துவஞ்சேரலிரும்பொறை வழிவந்த செல்வக்கடுங்கோ வாழியாதன், தகடூர் எறிந்த பெருங்சேரல் இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை ஆகியோரை முறையே கபிலர், அரிசில் கிழார், பெருங்குன்றூர்கிழார் ஆகியோரும் பாடியுள்ளனர்.

இவர்களுள் இரண்டாவது பத்தையும் நான்காவது பத்தையும் பாடிய குமட்டூர்க்கண்ணனார், காப்பியாற்றுக் காப்பியனார் ஆகிய இருவரும் பதிற்றுப்பத்தில் மட்டுமே பாடியுள்ளனர். ஆனால் மூன்றாம் பத்தைப் பாடிய பாலைகௌதமனார் பதிற்றுப்பத்தில் மட்டுமின்றிப் புறநானூற்றிலும் ஒரு செய்யுள் (366) பாடியுள்ளார். ஐந்தாவது பத்தைப் பாடிய பரணர் பதிற்றுப்பத்தில் மட்டுமன்றி அகநானூறு (13) ஆகியவற்றிலும் பாடியுள்ளார். ஆறாம் பத்தைப் பாடிய காக்கைப்பாடினியார், நற்செள்ளையார் குறுந்தொகையிலும் (210) புறநானூற்றிலும் (278) ஒவ்வொரு செய்யுள் பாடியுள்ளார். ஏழாம் பத்து பாடிய கபிலரோ பதிற்றுப் பத்திலும், அகநானூறு (18), ஐங்குறுநூறு (100), குறுந்தொகை (29), நற்றிணை (20), புறநானூறு (28), ஆகிய நூல்களிலும் கலித்தொகையிலும் (குறிஞ்சிக்கலியை) பாடியுள்ளதாகக் கூறுவர். குறிஞ்சிக் கலி இவர் பாடியதா என்பதில் கருத்து வேற்றுமையுண்டு. சதாசிவம் (1974) தன்னுடைய ஆய்வுரையில் பல்வேறு செய்திகளை எடுத்துக்காட்டி இவ்விரு கபிலரும் வேறுவேறு என்பார். எட்டாம்பத்தைப் பாடிய அரிசில் கிழாரும் குறுந்தொகையில் ஒரு செய்யுளும் (193), புறநானூற்றில் ஏழு செய்யுள்களும் பாடியுள்ளார். ஒன்பதாவது பத்தைப் பாடிய பெருங்குன்றூர்கிழார் குறுந்தொகையில் ஒரு

செய்யுளும் (338), அகத்தில் ஒரு செய்யுளும் (8), நற்றிணையில் நான்கு செய்யுள்களும் புறநானூற்றில் ஐந்து செய்யுள்களும் பாடியுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

பதிற்றுப்பத்து பாடிய எட்டுப் புலவர்களில் ஆறு புலவர்கள் ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, புறநானூறு போன்ற பல சங்க நூல்களிலும் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். கடைசிப் பத்தாக இப்போது நமக்குக் கிடைக்கும் ஒன்பதாவது பத்தைப் பாடிய பெருங்குன்றூர்கிழார் கூட குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு ஆகியவற்றில் பாடியிருப்பது பதிற்றுப்பத்தின் காலத்தை நிர்ணயிப்பதற்கு உதவும்.

பதிற்றுப்பத்தின் காலம் பற்றி ஆராயும் வையாபுரிப்பிள்ளை (1952:75-76) இது குறுந்தொகை, ஐங்குறுநூறு, அகநானூறு, நற்றிணை ஆகியவற்றிற்குப் பிற்பட்டது எனக் கூறுவார். ஆனால் ஒன்பதாவது பத்தைப் பாடிய பெருங்குன்றூர்கிழாரே குறுந்தொகை, நற்றிணை, ஆகியவற்றில் பாடியிருப்பது பிள்ளையின் கருத்தை வலியுறுத்துவதாக இல்லை. இவரைப் போன்றே பரணர், காக்கைப் பாடினியார் நச்செள்ளையார், கபிலர், அரிசில்கிழார் ஆகியோரும் குறுந்தொகை, அகநானூறு, ஐங்குறுநூறு, நற்றிணை, புறநானூறு ஆகியவற்றில் பாடியிருப்பதும் இங்குக் கவனிக்கத்தக்கது. மேலும் நான்காம் பத்து பாடிய காப்பியாற்றுக் காப்பியனாருடைய மகனே காப்பியன் சேந்தனார் என அறிஞர்கள் (பதிற்றுப்பத்து, ம.ப. 1968 : 36) கருதுவர். இவர் பாடியதாக நற்றிணையில் ஒரு பாடல் (246) காணப்படுகிறது. மட்டுமன்றிக் களங்காய்க்கண்ணியோடு மாறுபட்ட நன்னன், நெடுமிடல் அஞ்சி ஆகியோரைப் பற்றி கல்லாடனார் (அகம் 209) பாடலை பாடிய பெருங்கடுங்கோ (நற். 391) போன்ற புலவர்கள் பாடியுள்ளனர்.

மேலும் பரணர் கடல் பிறக்கோட்டிய செங்குட்டுவனைப் பாடும்போது நேரில் கண்டு பெரிதும் உவந்து, இப்பத்தினைப்

பாடியுள்ளார் என ஔவை சு.துரைசாமிப்பிள்ளை குறிப்பிடுவார் (பதிற்றுப்பத்து, மறுபதிப்பு 1968 : 17) 'இனியா ருளரோநின் முன்னுமில்லை (பதி 45-18) எனவும், 'தொலையாக் கற்பநின்னிலை கண்டிகுமே' (பதி 43-31) எனவும் பரணர் கூறுவது இங்குக் கவனிக்கத்தக்கது.

அடுத்து, ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைப் பாடிய காக்கைப் பாடினியார் நச்செள்ளையார் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனோடு உடன் உறைந்திருந்தவர் என்பதும், அவனைச் 'சுடர் நுதின் மடநோக்கின் வாணகை யிலங்கெயிற் றமிழ்துபொதிதுவர்வா யசைநடை விறலியர் பாடல் சான்று நீடினை யுறைதலின்.........உள்ளுவர் கொல்லோநின் னுணரா தோதே'' (பதி. 51-19) என அறிவுறுத்துவதும் இங்கு உணரத்தக்கது. எனவே ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் காலத்திலேயே காக்கைப்பாடினியார் வாழ்ந்தவர் என்பது நன்கு விளங்கும். இவரும் குறுந்தொகையில் பாடியிருப்பது இங்கு நினைவுகூரத்தக்கது.

இவரைப் போன்றே கபிலரும் பதிற்றுப்பத்துத் தவிர வேறு பல நூல்களிலும் பாடியுள்ளார். இவர் செல்வக் கடுங்கோ வாழியாதனை அடைந்து ''மலர்ந்த மார்பின் மாவண் பாரி முழவுமண்பு லர விரவல ரினைய வாராச் சேட்புலம் படர்ந்தோ னளிக்கென இரக்குவாரே னெஞ்சிக் கூறேன்' (பதி. 61-8) எனக் கூறுதலின் இவர் செல்வக்கடுங்கோ வாழியாதன் காலத்தவர் என்பது பெறப்படும்.

இவரும் குறுந்தொகை, நற்றிணை, போன்ற நூல்களில் பாடியுள்ளமை இங்கு நினைவுகூரத்தக்கது. இதே நிலையைத்தான் அரிசில்கிழாரிடமும் காணுகிறோம். இவரும் இரும்பொறைக் காலத்திலேயே வாழ்ந்தவர். இவரும் குறுந்தொகை, புறநானூறு ஆகியவற்றில் பாடியுள்ளார். இந்நிலையில் பதிற்றுப்பத்தின் காலநிலை ஓரளவுக்குத் தெளிவாகும்.

குறுந்தொகையில் காணப்படும் எல்லாப் பாடல்களுக்கும் பதிற்றுப்பத்து முந்தியது எனக் கூற முடியாது. எனினும் பல பாடல்களோடு ஒத்த காலத்தது என்றும், ஒரு சில பாடல்களுக்கேனும் முந்தியது என்றும் கூறலாம்.

ஒன்பதாவது பத்தைப் பாடிய பெருங்குன்றூர்கிழார் குறுந்தொகையில் ஒன்றும் (338), அகத்தில் ஒன்றும் (8), நற்றிணையில் நான்கும் (5, 112, 119, 347), புறத்தில் ஐந்தும் (147, 210, 211, 266, 318) பாடியுள்ளார். இந்நிலையில் ஒன்பதும் பத்தும், குறுந்தொகை போன்ற நூல்களில் காணப்படும் மேல் காட்டப்பட்ட பாக்களும் சமகாலத்தவை. இந்நிலையில் பதிற்றுப்பத்து குறுந்தொகைக்குப் பிந்தியது எனக் கூறமுடியாது.

பத்தாம் பத்து யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும் பொறையைப் பற்றியது என அறிஞர்கள் கருதுவர். ஐங்குறுநூற்றைத் தொகுத்தவன் இவனே. இப்பத்து இவனைப் பற்றியது. ஆயின் நிச்சயமாகப் பதிற்றுப்பத்து பாடப்பட்ட காலத்தை மிகப் பின்னுக்குக் கொண்டு போக முடியாது. பாடப்பட்ட காலம் வேறு. தொகுக்கப்பட்ட காலம் வேறு. இந்நிலையில் பதிற்றுப்பத்து சங்க இலக்கியங்களில் வையாபுரிப்பிள்ளை கருதுவது போல மிகப் பிந்தியதன்று.

துணை நூல்கள் :

1) வெங்கட்சாமிநாதன், சில இலக்கிய ஆளுமைகள்

2) சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம், தமிழ்ப் பல்கலைக்கழகம் 1986.

3) Pande, B.P., Texonomy of Angiosperms, S.Chand & Company, New Delhi 1995.

# அணு பயங்கரவாத சவால்

அணு பயங்கரவாதம் என்பது உலக சமுதாயத்திற்கு பெரும் சவாலாக உள்ளது. இந்த சவாலை எதிர்கொள்ளும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கான தீர்மானம் கொண்டு வரப்பட வேண்டும் என்று ஐ.நா. பொதுச் சபையில் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

## 2010ல் அணு பாதுகாப்பு தொடர்பான சர்வதேச உச்சி மாநாடு

அணு பாதுகாப்பை மேம்படுத்த வேண்டும் என்பதில் சர்வதேச முயற்சிகளுக்கு நாங்கள் ஆதரவை அளித்து வருகிறோம். இந்த விஷயத்தில் அணுசக்தி பாதுகாப்பு தொடர்பான உலகளாவிய உச்சி மாநாட்டை 2010–ம் ஆண்டில் நடத்த அதிபர் ஒபாமா உரிய நேரத்தில் எடுத்துள்ள முயற்சிகளை நாங்கள் வரவேற்கிறோம்.

அணுவின் சக்தியை நாம் உலக நன்மைக்காக பயன்படுத்தினால் எல்லையற்ற வாய்ப்புகள் உள்ளன. அவ்வாறு நாம் பயன்படுத்தாவிட்டால் அதனால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் எல்லா நாடுகளும் தங்கள் மக்களுக்காக விரும்பும் அமைதி மற்றும் முன்னேற்றத்தை கடுமையாக பாதிக்கும். வாய்ப்புகள் குறைவாகவும், சவால்கள் அச்சுறுத்தல்களாகவும் உள்ளன. ஆனால் இவற்றுக்கான தீர்வுகளை காண்பது நமது கற்பனைக்கு உட்பட்டதாகவே உள்ளது. மனிதர்களின் முன்னேற்றத்திற்கு அணுசக்தி அதிக அளவில் பயன்படுத்தப்பட வேண்டும். அதே நேரத்தில் உலக அமைதியும், பாதுகாப்பும் உறுதி செய்யப்பட வேண்டும். இந்தப் பணிக்கு அனைவரின் ஒன்றுபட்ட உறுதி தேவைப்படுகிறது. இந்தப் பணியை செய்வதில் நாம் காலம் தாழ்த்தக் கூடாது.

இத்துடன் நான் உங்கள் அனைவரையும் மீண்டும் ஒரு முறை வரவேற்று இந்த மாநாட்டில் நடைபெற உள்ள விவாதங்கள் வெற்றி பெற எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

---

செப்டம்பர் 29, 2009 அன்று அணுசக்தியை அமைதியான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவது தொடர்பான சர்வதேச மாநாட்டில் பிரதமர் ஆற்றிய தொடக்க உரை

சிவமயம்

# தமிழ் அலங்காரச் சதகம்

கவிஞர். மழைமகன்
பவானி

## விநாயகர் துதி

அருந் தமிழை அழகுபெற அவனிமிசை அருளாளர்
அமுதூர வைத்த நிலையை,
ஆன்றோர்கள் போற்றியும், சான்றோர்கள் ஏற்றியும்
ஆரா தனை புரிந்ததை
விருந்தாக்கிப் படைக்கின்ற வேளைவிநாயகன்
விருப்புற்று வந்து கேட்டு
விரிக்கின்ற பாவுக்கும் விழைகின்ற பொருளுக்கும்
வித்தாகி விளைவுமாகி
கருவுக்குள் உயிராகிக் கவிதைக்கு வளமாகி
கற்போர்க்குச் சுவையாகவும்
கற்கண்டு, தேன்பாகும் கைக்கின்ற திப்பாவைக்
கற்கின்கின்ற போதில் என்ன
அருளாசி தந்திந்த சதகத்தில் தமிழ் மேவ
ஆனைமுகன் உன் அடியிலே
அன்றாடம் துதிபாடி அருச்சிப்பன் பலகோடி
அதுவெந்தன் வாழ்வின் பயனே!

## நூல்

### 1. தலையான தமிழ்

அன்று செம்மொழியான தமிழுக்கு இணையாக
அகிலத்தி லெதுவு மில்லை
அறிகவென் றேமுருகன் அம்மைகலை மகளறிய
அனுப்பினான் சீட்டொன்றையே !
என்றுமே தமிழ்க்கு ஈடெதுவு மேயில்லை
என்றந்த கும்ப முனியும்
இறுமாந் துரைத்திட, இருக்கின்ற தென்பாரும்
இருந்தமதி தேய்ந்து ரைக்கும்
ஒன்றுக்கும் உதவாத பேர்கூறும் வார்த்தையில்
உண்மை இலை என்றாலுமே
ஒருவார்த்தை சமமுள்ள தென்றாலும், தவறுதான்.
ஒருவீர் புவன மக்காள்
நின்றுநிலை யாகவுள செந்தமிழி னைப்போல
நேரான மொழி எதுவுமே
நிச்சயம் இல்லை இது. நக்கிரன் வாக்காகும்
நான் போற்றும் உமை பாகனே!

(பா தொடரும்)

# தமிழா, ஒரு வழக்கு !

## கவிவேந்தர் கா. வேழவேந்தன்

ஓ, ஓ தமிழா ! ஓ, ஓ தமிழா !
வா, வா ! உன்மேல் வழக்கொன் றுரைப்பேன் !
இமய நெற்றியில் இலச்சினை பொறித்தே,
நிமிர்ந்த மறவன்உன் நெடும்புகழ்ப் பாட்டனா?
முறத்தைக் கொண்டே முரட்டுப் புலியினைத்
துரத்திய மறத்திஉன் சொந்தப் பாட்டியா?
கடாரம் வென்றவன், கங்கையைக் கொண்டவன்,
அடாத சிங்களர் ஆணவம் அழித்தவன்,
சாவகம், புட்பகம், நாவலந் தீவெலாம்
காவல் செய்தவன் கால்வழி உன்னதா?
ஆயிர மாயிரம் ஆண்டுமுன் இலக்கியப்
பாயிரம் படைத்தோன் பரம்பரை யா, நீ?
என்ன கதைக்கிறாய்? இவையெலாம் உண்மையா?
இன்றுன் நிலையினை எண்ணிடக் கேட்கிறேன் !
உலகம் முளைத்ததும் ஓங்கிக் கிளைத்தன
'உயர்தனிச் செம்மொழி' ஒரு சில ! அவற்றுள்
சீரிளந் தமிழின் சிறப்பெலாம் கொஞ்சமா?
'சீசர்' பேசிய சீர் 'இலத்தீன்' எங்கே?
'சாக்ரடீஸ்' அன்று தத்துவம் வழங்கி,

மாக்குரல் தந்த 'கிரேக்கம்' உள்ளதா?
'சகுந்தலை' மொழிந்த 'சமக்கிருதம்' எங்கே?
புகழ்மொழி இவற்றில் பொழுதெலாம் பேசிட,
அகழ்ந்தெடுத் தாலும் ஆள்களும் ஏது?
வள்ளுவர், இளங்கோ, வளமார் பாரி,
தெள்ளிய கண்ணகி, சேரன் குட்டுவன்
அன்னோர் பேசிய அழியாத் 'தமி' ழிலே
இன்னமும் குப்பனும் குப்பியும் பேசுவார் !
ஆறுகண் டத்தின் ஐம்பது நாடெலாம்
தாறுமா றாகத் தமிழினம் பிரிந்துளோம் !
மொத்தமாய்த் தமிழர் பத்துகோ டிப்பேர்
இத்தரை மீதோ இருக்கிறோம், கணக்கில் !
பூமியாம் பந்தின் பொந்தெலாம் ஓடி,
ஆமையாய் ஊமையாய் அடிமையாய் வாழினும்,
தாய், முலைப் பாலுடன் தந்தசீர்த் தமிழினை
வாய்மொழி பேசவும் வஞ்சகம் செய்வதோ?
தமிழிலே பேசவும், தமிழிலே எழுதவும்
தயங்கியே கூசுவோன், தமிழனின் விதையா?

# செம்மொழித் தமிழ்ப் பூங்கா

*திரு. ஆதி. பாலசுந்தரன்*
நாகர்கோவில்

உலகச் செம்மொழித் தமிழ் மாநாட்டின் மதிப்புறு நிரந்தர நினைவுச் சின்னமாக , மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் சிந்தனையில் முகிழ்த்த வண்ணம், தமிழக அரசால் செம்மொழித் தமிழ்ப் பூங்கா அமைக்கப்பட்டுவரும் வரலாற்றுப் பதிவு நிகழ்வை உலகத் தமிழர் அனைவரும் வரவேற்று மகிழ்கின்றனர்., எதிர் நோக்கி நிற்கின்றனர்.

இன்றைய தமிழக அரசு அமைக்காவிட்டால் பின்னர் எந்த அரசுதான் அமைக்கும்?. இப்போது அமைக்காவிடில், பின் எப்போது?. செம்மொழித் தமிழ்ப் பூங்கா ஒரு காலப் பேழை !

தாவரங்களை இனம் கண்டு பகுத்துப் பெயர் இட்டனர் நம் முன்னோர். மலர்கள் மலர்வதையும், மரங்கள் பயன் தருவதையும் கணக்கிட்டுப் பொழுதையும், காலத்தையும் அறிந்து அளந்து கூறினர். அவ்வல்லாரின் நுண்ணறிவு, சிந்திக்கும் திறன் முதலியவற்றால், உலகத் தாவர இயல் ஆய்வாளர் வரிசையில் வைத்துப் பெருமைப்படுத்தப்படும் பாராட்டுக்குரியர். மறந்தவைபோக, எஞ்சியவற்றையாவது, நாமும், வரும்கால நம் கால் வழியினரும் நினைவில் வைத்துக் கொள்ள இச் செம்மொழித் தமிழ்ப் பூங்கா மிகவும் உதவியன்றோ.

இப்பணி தொடர்பான சில செய்திகளைக் காண்போம்.

1. பெங்களுரு - மைசூர் நெடுஞ்சாலையில், இராம்நகர அருகில் Sacred Grove என்னும் புனிதச் சோலை ஒன்று டாக்டர் எல்லப்பரெட்டி என்பவரால் அமைக்கப்பட்டுள்ளது.

இச்சோலையில், விநாயக விரத வனம், நரசிம்மவனம், சப்தரிஷி காஷ்யபர் வனம், ராசிவனம் ஆகிய பெயர்களில், வராக மிகிரர் கூறும்

முறையில் வனங்களை அமைத்துள்ளனர். இவை ஒவ்வொன்றும் சதுர வடிவில் அமைந்தவை. இச்சதுர வடிவங்களில் சாதகக் கட்டங்களைப் போன்ற அளவுக்குள், இராசி அதிபதிக்குச் சொல்லப்படுகிற மலர்களைத் தரும் தாவரங்களை வளர்க்கின்றனர்.

ஸ்ரீ சக்கர வடிவில் நட்சத்திர வனம் என ஒன்று அமைத்துள்ளனர். லலிதா சஹஸ்ரநாமத்தில் குறிப்பிடப் படுகிற மலர் தரும் செடி கொடி மரங்களை வளர்க்கின்றனர்.

வால்மீகி ராமாயணம், சுந்தர காண்டம் சொல்லுகிற தாவர இனங்கள், அனுமன் ஏறி அமர்ந்த "சிம்சுகா" மரம் ஆகியனவற்றையும் ஆங்கு வளர்க்கின்றனர்.

2. ஷேக்ஸ்பியர் நாடகங்களில் சொல்லப்படுகின்ற தாவரங்களை இனம் கண்டறிந்து, அவை வளர்வதற்கு ஏற்றவாறு தட்ப வெப்ப நிலைகளை மாற்றியமைத்து ஒரு பூங்காவில் பேணி வளர்த்து வருகின்றனர். அப் பூங்காவுக்கு, "ஷேக்ஸ்பியர் பூங்கா" என்பது பெயர். இப் பூங்காவை இங்கிலாந்து நாட்டில் உருவாக்கவில்லை. ஜப்பான் நாட்டில் உருவாக்கியுள்ளனர்.

3. அ. இவற்றை அறியும்போது, நம் சங்க இலக்கியங்களில் கூறப்படும் தாவரங்களைக் கண்டறிந்து, இனம் பிரித்துப் பேணுவதற்கு, நிரந்தர நிலையமாகச் செம்மொழித் தமிழ்ப் பூங்கா எத்தகைய இன்றியமையாதது என்னும் உணர்வு நம்முள் எழுகிறது. மாண்பு மிகு முதல்வர் கலைஞர் அவர்கள் சிந்தனையால், இவ் அருஞ்செயல் நிறைவேறுகிறது.

ஆ. செம்மொழித் தமிழ்ப் பூங்காவில், நால்வகை நிலங்களை வகுத்துக் கூறும் தொல்காப்பிய, நூற்பாக்களையும் அவைதரும் விளக்கத்தையும் கல்லில் பொறித்து வைத்தல்,

இ. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலும் கல்வெட்டில் பொறித்தல்.

பலரும் விளங்கிக் கொள்ள ஆங்கிலம், இந்தி, கன்னடம், தெலுங்கு மொழிகளிலும் கல்வெட்டில் பொறித்தல்.

ஈ. குமரிக் கடற்கரையில், லெமூரியாக் கண்டம் பற்றிய விளக்கம் தமிழோடு, மேற் குறித்த மொழிகளிலும் பொறித்தல்.

கடல் கொண்ட திராவிட நாகரிகத்தை உலகினர் உணர இவ்வாய்ப்பளித்தல் அவசியம்.

4. செம்மொழித் தமிழ்ப் பூங்காவின் தோரணவாயில் இருபக்கத் தூண்களிலும், தொல்காப்பியம், திருக்குறள், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களின் பெயர்களை, கண்ணாடிப் பேழையில் அடுக்கி வைத்த புத்தகங்களின் முதுகுப் பகுதியில், புத்தகப் பெயர்கள் தெரிவது போல், பளிங்குக் கற்களைப் புத்தக வடிவாக்கி, பெயர் பொறித்து, அடுக்கி வைத்துக் காட்சிப் படுத்தல்.

காலத்தை வென்று நிற்கும் உயிர் எழுத்துக்களாம் இவை, மெய்யெழுத்துக்களாய் மெய்ம்மையைச் சாற்றி நிற்கும்.

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : **தவம் பிரிண்டர்ஸ்,** 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/56 February 2011 MA/130/2011

# செந்தமிழ்க் கல்லூரி

## மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது)

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.



54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

## 2010 - 2011ஆம் ஆண்டிற்கான சேர்க்கை நடைபெறுகிறது

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

**நன்கொடை கிடையாது**

### சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

| இரா. அழகுமலை | முனைவர் சு. விஜயன் | இரா. குருசாமி |
|---|---|---|
| செயலாளர் | முதல்வர் (பொறுப்பு) | செயலாளர் |
| மதுரைத் தமிழ்ச் சங்கம் | செந்தமிழ்க் கல்லூரி | செந்தமிழ்க் கல்லூரி |

அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை - 625 001

From

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by V. Govindarajan, published by R. ALAGUMALAI M.A., M.Phil. on behalf of Madurai Tamil Sangam, Madurai and printed at Davam Printers, 32, West Masi Street, Madurai - 1, and published at 54, Tamil Sangam Road, Madurai. Editor R. ALAGUMALAI M.A., M.Phil.